செ.வெ.எண்: 26/2020 நாள்: 11.02.2020

# பத்திரிக்கைச் செய்தி

# மகளிர் திட்டம்

## தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DDU –GKY)
## தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் , இ.ஆ.ப., அவர்களின் செய்திகுறிப்பு !!!

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், திருப்பூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, பல்வேறு முன்னணி தனியார் நிறுவனங்களைக் கொண்டு குன்னத்தூர் NRKN உயர்நிலைப்பள்ளி, வளாகத்தில் 15.02.2020 அன்று வேலைவாய்ப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமில் திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள பள்ளிக்கல்வி, தொழிற்பயிற்சி (ITI), பட்டயப்படிப்பு (Diploma), இளங்கலை மற்றும் முதுகலை படித்த அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், (DDUGKY) தீன்தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல் யோஜனா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வேலைவாய்ப்புடன் கூடிய இலவச தொழில் திறன் பயிற்சியில் தங்களது பெயர் மற்றும் முகவரியை பதிவு செய்து பயன்பெறுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமில் கலந்து கொள்ள வருபவர்கள் தங்களது சுய விபரம் (Bio-Data), அனைத்து கல்விச் சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்-2 ஆகியவற்றுடன் வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எண்:**

**இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு ,**
**மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியர் வளாகம்,**
**திருப்பூர் மாவட்டம்.**
**தொலைபேசி எண்: 0421 -2971149**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**